## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 9.5.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்திட பல்வேறு நலத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிய அரசு இந்த அரசு என்பதை பெருமையோடு இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், அனைத்து விடுதிகளுக்கும் நவீன வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 1294 விடுதிகளில் 1000 விடுதிகள் ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை 2001 முதல் 2006 வரை நடைபெற்ற எனது 2-வது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 226 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சியுள்ள 68 விடுதிகளுக்கு நடப்பாண்டில் 86 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் 47 விடுதிகள் 100 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும், 21 விடுதிகள் 50 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும் கட்டப்படும். இவ்வாறு கட்டப்படும் கட்டடங்களில் சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகள் மற்றும் சூரிய ஒளி போட்டோ வோல்டேக் பவர் பிளாண்ட் ஆகியவை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் நிறுவப்படும்.

இது மட்டுமல்லாமல், 1,000 ஏழை, எளிய மாணவ – மாணவியர் பயன்பெறும் வகையில், 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோருக்கான 5 விடுதிகள், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 3 விடுதிகள், சீர் மரபினருக்கான ஒரு விடுதி மற்றும் சிறுபான்மையினருக்கான ஒரு விடுதி என மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் 1000 விடுதிகளில் சுமார் 767 விடுதிகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் நல்ல அமைதியான, சுகாதாரமான சூழ்நிலையில் தங்கி கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இவ்விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ஒரு முறை ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு தற்போது ஒரு லட்சம் ரூபாயாக உள்ளது. இது 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 23 கோடியே 24 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் ஏறத்தாழ 1,05,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் பயனடைவர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறு கடன் திட்டத்தின் கீழ் 20 உறுப்பினர்கள் அடங்கிய மகளிர் சுய உதவி குழு ஒன்றிற்கு அதிக பட்சம் பத்து லட்சம் ரூபாய் வரை 4 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கு அதே அளவில் 5 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. தனி நபர் மகளிருக்கு 'புதிய பொற்கால திட்டத்தின்' கீழும், ஆடவர் தனி நபருக்கு 'பொதுக் கால கடன் திட்டத்தின்' கீழும் அதிக பட்சம் ஒரு லட்சம் ரூபாய் வரை முறையே 5 விழுக்காடு மற்றும் 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இது தவிர, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் தலா 2 உயர் ரக கறவை மாடுகள் வாங்குவதற்கு அதிக பட்சம் 60,000/– ரூபாய் வரை 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இந்த நிறுவனம் இதுவரை 3,22,831 பயனாளிகளுக்கு 313 கோடியே 93 லட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கியுள்ளது. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு புதிய ஆழ் துளை கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள வழங்கப்படும் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் இதுவரை 785 பயனாளிகளுக்கு 3 கோடியே 84 லட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக லாப நோக்கமின்றி செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலக கட்டடம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக சென்னை, எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூரில் 4 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 3 கிரவுண்டு மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட அரசு நிலம் நிலக் கிரயமின்றி இந்த நிறுவனத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இடத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலக கட்டடம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னேற்றம் அடையவும் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******